**STARTING TIME 10.46 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 29/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Assistant of this court, on 11.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **அமுதவள்ளி** Husband’s Name : **சதாசிவம்**

Address :

Calling : Age :

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால், 5ம் வகுப்பு படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால், ஓரளவிற்கு தெரியும். இவ்வழக்கின் A அட்டவணை சொத்துக்களை எனது அம்மா பெயருக்கு அவரது தகப்பனார் 01.09.1971 அன்று செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்துக்கள் என்றால், சரிதான். B அட்டவணை சொத்துக்கள் எனது அம்மாவுக்கு அவரது அண்ணன் பெருமாள் கடந்த 20.12.1999 அன்று செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்துக்கள் என்றால், சரிதான்.

2. எனது அம்மா பெயருக்கு எனது தாத்தா எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால், இல்லை. எனது தாயாருக்கு சீதனமாக கொடுத்த 01.09.1971 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். தாவா A அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து எனது தாயாருக்கு ஆயுட் காலம் வரை அனுபவிக்கும்

உரிமை மட்டும் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது தாயாரின் ஆயுட் காலத்திற்கு பிறகு தாவா A அட்டவணை சொத்துக்களை எனது தாயாரின் குழந்தைகள் அனைவரும் சமமாக பிரித்துக் கொள்ளப்பட வேண்டுமென எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

3. 20.12.1999 அன்று எனது அம்மாவிற்கு அவரது அண்ணன் பெருமாள் எழுதி வைத்த வா.சா.ஆ–2 செட்டில்மெண்ட் பத்திரத்திலும், தாவா B அட்டவணை சொத்தைப் பொறுத்து எனது தாயாருக்கு ஆயுட் காலம் வரை அனுபவிக்கும் உரிமை மட்டும் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது தாயாரின் ஆயுட் காலத்திற்கு பிறகு தாவா B அட்டவணை சொத்தினை 1ம் பிரதிவாதி, நான் மற்றும் வாதி ஆகியோர் சமமாக பிரித்துக் கொள்ளப்பட வேண்டுமென வா.சா.ஆ–2 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

4. எனது அம்மா 28.09.2013 அன்று காலமானார் என்றால், சரிதான். என் அம்மாவின் காலத்திற்கு முன்போ அல்லது பின்போ, எனது அம்மா பெயரில் இருந்த சொத்துக்களையோ அல்லது எனது அப்பா பெயரில் இருந்த சொத்துக்களையோ நானும் என் உடன் பிறந்தவர்களும் பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால், எனது அப்பாவிற்கு சொந்தமான சொத்துக்களை பாகம் பிரித்துக் கொள்ளவில்லை, எனது அம்மாவிற்கு சொந்தமான சொத்துக்களை அவர் உயிருடன் இருந்தபோதே குடும்பத்தில் நடைபெற்ற குடும்ப ஏற்பாட்டில் தனித்தனியாக பாகம் பிரித்துக் கொடுத்துவிட்டார்.

5. அதுபோல், எனது தாயார் பாகம் பிரித்துக் கொடுத்ததற்கான பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால், எழுத்து மூலமாக பாகம் பிரித்துக் கொள்ளவில்லை, வாய்மூலமாக தான் பாகம் பிரித்துக் கொடுத்தார். அவ்வாறு வாய்மூலமாக பிரித்துக் கொடுத்ததில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்றால், எனக்கும் வாதிக்கும் மட்டும் சொத்தை பிரித்துக் கொடுத்தார், எனது அண்ணனுக்கு எதுவும் கொடுக்கவில்லை. சமமாக பாகம் பிரிக்காமல் மற்ற

பாகஸ்தர்களுக்கு பாகம் கொடுக்காமல் பாகம் பிரித்துக் கொண்டுள்ளோம் என்றால், சரியல்ல.

6. எனது தாயார் பிரித்துக் கொடுத்ததாக சொல்லும் சொத்து என்பது, எனது அம்மா பெயருக்கு அவரது தகப்பனாரும், அண்ணனும் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த தாவா A மற்றும் B அட்டவணை சொத்துக்கள் என்றால், சரிதான். எனது தாயார் குடும்ப ஏற்பாட்டின் மூலம் சொத்துக்களை பிரித்து கொடுத்த போது, எனது தாயார் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரங்களை குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியும்.

7. செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து எனக்கு தெரிந்த நிலையில், செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எனது தாயாருக்கு முழு உரிமை இல்லாத நிலையில், அவர் சொத்துக்களை பிரித்துக் கொடுக்க உரிமை இல்லை என்பதை நான் கேட்டேனா என்றால், கேட்டேன், எங்களுக்கு சொத்தை கொடுப்பதற்கு முன்பே ஒரு சொத்தை பொன்னுசாமி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டதால், சொத்தை எங்களுக்கு கொடுப்பதாக சொன்னார்.

8. பொன்னுசாமி என்பவருக்கு எந்த சொத்தை என் தாயார் விற்பனை செய்தார் என்றால், காலி மனை ஒன்றை நானும், வாதியும் எனது தாயாரும் சேர்ந்து எழுதி கொடுத்தோம். பொன்னுசாமிக்கு விற்பனை செய்த சொத்து என்பது தாவா A அட்டவணை சொத்துக்களின் ஒரு பகுதி என்றால், சரிதான். பொன்னுசாமிக்கு சொத்தை விற்பனை செய்த போது வாதி சுமார் 10 வயதுடைய இளவர் என்றால், சரியல்ல, பொன்னுசாமிக்கு தானும் சேர்ந்து கிரையம் செய்ததாகதான் வாதியின் வழக்கும், சாட்சியமும் ஆகும்.

9. எனது அம்மா என் பெயருக்கு எத்தனை செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்தார் என்றால், 2 பத்திரங்கள் எழுதி வைத்தார். பி.வா.சா.ஆ–6 ஆவணம் 30.12.2002 அன்று என் பெயருக்கு என் தாயார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் ஆவணம் என்றால், சரிதான். அந்த

ஆவணத்தில் உள்ள சொத்தை என் தாயார் கடந்த 01.09.1971 அன்று கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். 01.09.1971 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை கிரைய பத்திரம் என குறிப்பிட்டு, உண்மையை மறைத்த பி.வா.சா.ஆ–6 ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

10. தாவா A அட்டவணையில் உள்ள 70 செண்ட் விஸ்தீரணத்தில், 30 செண்ட் விஸ்தீரண சொத்தை பி.வா.சா.ஆ–6 ஆவணம் மூலம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன் தொடர்ச்சியாக 30.05.2003 அன்று மீதமுள்ள 40 செண்ட் சொத்தினை பி.வா.சா.ஆ–2 ஆவணம் மூலம் எனது தாயார் எழுதி கொடுத்துள்ளார் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–3 ஆவணத்திலும், பட்டா பாஸ் புக் எண் 60427, பட்டா எண் 1233, 1241ன் படி பாத்தியப்பட்டதாக சொல்லி தான் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

11. பி.வா.சா.ஆ–2 மற்றும் 6 ஆவணம் மோசடியான பத்திரங்கள் என்பதால், அவைகள் செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. அந்த காரணத்தால்தான் என் பெயரில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரங்களை மட்டும் தாக்கல் செய்துவிட்டு, அதற்கு மூல ஆவணங்களான 1971 மற்றும் 1999ம் வருடத்திய செட்டில்மெண்ட் பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

12. பி.வா.சா.ஆ–5 ஆவணம் வாதிக்கு ரூ.50,000/– பணம் கொடுத்து அதற்கு அவர் எழுதி கொடுத்தார் என சொல்லி அதை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–5 ஆவணமும், பி.வா.சா.ஆ–2 ஆவணமும் ஒரே நாளில் எழுதப்பட்டவைகள் என்றால், சரிதான். அந்த ஆவணங்கள் எழுதிய சமயத்தில் எனக்கும், எனது தாயார் மற்றும் வாதிக்கும் சுமூகமான உறவு இருந்தது என்றால், சரிதான்.

13. பி.வா.சா.ஆ–5 ஆவணத்தில், 'இன்று நம் தாயார் மல்லிகா என்பவர் உமக்கு செட்டில்மெண்ட் செய்த சொத்துக்கள் என் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது' என

எழுதப்பட்டுள்ளது உண்மையா என்றால், ஆமாம். அந்த ஆவணம் எழுதப்பட்ட சமயத்தில், எனக்கும் எனது தாயார் மற்றும் வாதிக்கும் சுமூகமான உறவு இருந்த நிலையில் ஏன் விடுதலை பத்திரம் எழுதி பதிவு செய்துகொள்ளவில்லை என்றால், குடும்பத்தில் செய்து கொண்ட ஏற்பாட்டின் காரணமாக விடுதலை பத்திரம் எழுதவில்லை. பி.வா.சா.ஆ–5 ஆவணத்தில் வாதியின் கையெழுத்திற்கு முன்பு எழுதி கொடுத்தவர் என எழுதவில்லை என்றால், சரிதான்.

14. பி.வா.சா.ஆ–2 செட்டில்மெண்ட் பத்திரத்தில் வாதியும், அவர் கணவரும் சாட்சி கையெழுத்து செய்ததாக சொல்லி அந்த கையெழுத்துக்கள் பி.வா.சா.ஆ–3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல், வா.சா.ஆ–5 ஆவணத்திலும் வாதியின் கணவர் சாட்சி கையெழுத்து செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால், சரிதான்.

15. பி.வா.சா.ஆ–2 ஆவணத்தில் வாதியின் கணவரின் சாட்சி கையெழுத்திற்கு கீழ் அவரது விலாசம் என மாரியம்மன் கோயில் தெரு, காகிதப்பட்டரை, வேலூர் என உள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–5 ஆவணத்தில் வாதியின் கணவரின் தகப்பனார் பெயர் துளசி என எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–5 ஆவணத்தில் வாதியின் கணவரின் தகப்பனார் பெயர் துளசிராமன் என்றும், முகவரியை 32, பிள்ளையார் கோயில் தெரு, மேட்டுக்குப்பம், மதுரவாயில், சென்னை என குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான். எனவே, பி.வா.சா.ஆ–5 ஆவணத்தை நான் வழக்கிற்காக வேண்டி தயாரித்துள்ளேன் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**ENDING TIME 11.36.A.M.**

**(Sd/-. G. Yuvaraj)**
**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**